[1967 மார்ச் 29

மதிப்பிற்குரிய திரு. எஸ். ஜே. சாதிக் பாஷா: இப்போதுள்ள நிலைமையில் 1967 ஜூன் மாதத்திற்குள் அந்தத் திட்டம் முடிந்து விடும் என்று கூறப்படுகிறது. ஆகவே, தற்காலிகத் திட்டம் தேவையில்லையென்று கருதுகிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: இத்துடன் வினாக்கள், விடைகள் முடிவடைகின்றன.

குறிப்பு.—ஒரு உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. ஒழுங்குப் பிரச்சினை.

உறுப்பினர்மீது மற்றோர் உறுப்பினர் உரிமைத் தீர்மானம்.

திரு. ஏ. அ. சுப்பராஜா: சார் ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். சார், நான் இந்தச் சபையில் ஒரு ப்ரிவிலேஜ் மோஷன் கொடுத்திருக்கிறேன். அதுபற்றி . . . (மணி அடிக்கப்பட்டது).

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராஜா அவர்கள் ஒரு உரிமைத் தீர்மானத்தை என்னிடம் கொடுத்தார்கள். அந்த உரிமைத் தீர்மானத்தைப்பற்றி அவர் நன்றாக எடுத்து என்னிடத்தில் விளக்குவதற்குரிய வாய்ப்பை என் அறையில் கொடுத்தேன். அவர் சொன்ன கருத்துக்களைக் கேட்டுக் கொண்டு, அதை இந்த அவையில் எழுப்புவதற்குரிய அனுமதியைக் கொடுக்க மறுத்தேன். இப்பொழுதுள்ள கேள்வி, அவர் கொடுத்த உரிமைத் தீர்மானத்தை இந்த அவையில் நான் வாசித்துக் காண்பிக்க வேண்டுமா? அல்லது, மாண்புமிகு உறுப்பினரையே அவரது உரிமைத் தீர்மானத்தை இந்த அவையில் வாசிக்க அனுமதிக்க வேண்டுமா? அல்லது நான் எனது அறையிலேயே சொன்ன முடிவு இறுதியானதா? என்கிற கேள்விகள் எழுகின்றன. இதுபற்றி ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பியுள்ளார்கள். இதில் என்னுடைய தீர்ப்பை நான் மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் சொல்வதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் என்னிடம் கொடுத்துள்ள உரிமைத் தீர்மானம் இந்த அவையிலே உள்ள மற்றொரு உறுப்பினர் மீது ஆகும். உரிமைத் தீர்மானங்களை இரண்டு வகைப்படுத்தலாம். இந்த அவையில் உள்ள ஓர் உறுப்பினர் மற்றொரு உறுப்பினர்மீது குற்றஞ்சாட்டிக் கொண்டு வருகிற உரிமைத் தீர்மானம் ஒரு வகை. மற்றொரு வகை, வெளியார் மீது கொண்டுவருகிற உரிமைத் தீர்மானம். இரண்டையும் வெவ்வேறு கண்ணோட்டத்தோடு பார்க்கவேண்டும். இந்த அவையில் உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோருக்கும் பற்பல உரிமைகள் இருக்கின்றன. ஆகவே, ஓர் உறுப்பினர் மற்றொரு உறுப்பினர் மீது ஓர் உரிமைத் தீர்மானத்தைக் கொண்டு வரும்போது அதை நான் என்னுடைய அறையிலேயே நன்கு பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. அந்த உரிமைத் தீர்மானத்திற்கு ஆதாரம் இருக்கிறதா என்று முதலில் நான்

1967 மார்ச் 29] [மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்]

பார்த்துக்கொண்டாக வேண்டும். ஆதாரம் இருப்பதாக நான் கருதினுல் அந்த உரிமைத் தீர்மானத்தை இந்த அவையில் கொண்டு வர அனுமதி அளிக்கலாம். அப்படி இல்லாதபோது அதை நான் இந்த அவையில் வாசித்துக் காட்டவேண்டுமென்று சொல்வது வழக்குக்கு முரணனது. விதிமுறைகளுக்கும் முரணனது. நம்முடைய அவை விதிகளை எடுத்துப் பார்த்தால், மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் பேசும்போதே சில சொற்களை இந்த அவையில் பயன்படுத்தக் கூடாது . எடுத்துக் காட்டாக வஞ்சகம் என்ற சொல்லை, பொய் என்ற சொல்லை கண்ணியமற்ற சொல்லைப் பயன்படுத்தக் கூடாது என்று இருக்கிறது. இந்த வார்த்தைகள் எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் கொடுத்துள்ள உரிமைத் தீர்மானத்தில் இருக்கின்றன. அப்படி இருக்கும்போது அந்த உரிமைத் தீர்மானத்தை நான் இந்த அவையில் வாசிக்க வேண்டும் என்ருே, மாண்புமிகு உறுப்பினரை வாசிக்க அனுமதிக்க வேண்டுமென்ருே சொல்வது சரியல்ல. மாண்பு மிகு உறுப்பினர் மற்ருெரு உறுப்பினர் மீது உரிமை தீர்மானத்தைக் கொண்டுவரும் போது, குற்றம் சாட்டப் படுகிற அந்த உறுப்பினருக்கு உரிமை இல்லையா? ஆதாரமில்லாத ஒரு குற்றச்சாட்டு இந்த அவையில் வரும்போது அவர் மனம் புண் படாதா? அவரது கட்சியைச் சார்ந்தவர்கள் மனம் புண்படாதா? ஓர் உறுப்பினருக்கு மற்ருெரு உறுப்பினரைப் புண்படுத்த உரிமை இல்லை. எல்லோருடைய உரிமைகளையும் பாதுகாக்க நான் கடமைப்பட்டவன்.

ஆகவே, என்னுடைய தீர்ப்பு என்னவென்ருல் இந்த அவையில் உள்ள ஓர் உறுப்பினர், இந்த அவையில் உள்ள மற்ருேர் உறுப்பினர் மீது உரிமைத் தீர்மானம் கொண்டுவருகிறபோது—என்னுடைய அறையிலேயே அதைப்பற்றி உரிமைத் தீர்மானம் கொண்டுவருகிற உறுப்பினரோடு விவாதிப்பேன். முடிவில் அதற்கு நான் அனுமதி அறையில் அளித்தால்—அது இந்த அவையில் வாசித்துக்காட்டப்படும். என்னுடைய அறையிலேயே அனுமதி மறுக்கப்பட்ட உரிமைத் தீர்மானங்கள் இந்த அவையில் வாசித்துக்காட்டப்படமாட்டா. எனினும், வெளியார் மீது உரிமைத் தீர்மானம் கொண்டுவருகிறபோது இந்த நடைமுறையைப் பின்பற்ற வேண்டுமென்ற கட்டாயமில்லை. ஆக, இப்போது மாண்புமிகு சுப்பராஜா அவர்கள் கொடுத்துள்ள உரிமைத் தீர்மானத்தை இந்த அளவில் வாசித்துக்காட்ட அனுமதிக்க முடியாது. என்னுடைய அறையிலேயே அது நிராகரிக்கப்பட்டு விட்டது. என்று தீர்ப்புச் சொல்லிவிடுகிறேன்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : அவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்துள்ள உரிமைத் தீர்மானத்தில் . . .

மதிப்பிற்குரிய திரு. கே. ஏ. மதியழகன் : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். தங்கள் 'ரூலிங்' கொடுத்த பிறகு அதைப்பற்றிக் கனம் அங்கத்தினர் மீண்டும் இந்த அவையில் எழுப்பலாமா என்பதுபற்றியும் தாங்கள் தீர்ப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : ஒரு பிரச்சினை மீது பேரவைத்தலைவர் தீர்ப்பு அளித்த பிறகு அதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்வது தான் முறையேயொழிய அதன்மீது விவாதத்தை எழுப்புவது முறை அல்ல. மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையின் நடவடிக்கைகுக் குந்தகம் ஏற்படாமல், கண்ணியக் குறைவு ஏற்படாமல், விதிமுறைகளை ஒழுங்குமுறைகளைக் காப்பாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.
சிவகாசியில் நெல் மண்டிகள் கதவடைப்பு.

திரு. சௌடி எஸ். சுந்தர பாரதி: கனம் பேரவைத் தலைவர் அவர்களே, "இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள, சிவகாசியில் திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர்கள் சிலர் பதுக்கி வைக்கப்பட்ட நெல்லைக் காட்டிக்கொடுத்து, அதன்பேரில் பதுக்கி வைக்கப்பட்ட நெல் கைப்பற்றப்பட்டது என்ற காரணத்திற்காக, மண்டிகளை மூடி, நெல் வியாபாரத்தை நிறுத்தி, அப்பகுதி மக்களைப் பட்டினியால் பரிதவிக்கவிட்டு, அதன்மூலம் கழக ஆட்சிக்குக் கெட்ட பெயர் உண்டாக்கும் நோக்கத்துடன், சிவகாசியில் உள்ள வணிகர்கள், அங்குள்ள எல்லா மண்டிகளையும் கடந்த ஆறு தினங்களாக மூடிவிட்டதால், சிவகாசியிலும் சுற்றுப்புறங்களில் உள்ள கிராமப் பகுதியிலும் உள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள், உணவு கிடைக்காமல் பரிதவித்துப் பஞ்சத்தின் பிடியில் அகப்பட்டுள்ளார்கள். அதனால் அங்கு பெரும் கொந்தளிப்பான நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்நிலை மற்ற இடங்களுக்கும் பரவலாம். இந்தப் பொது முக்கியத்துவம் வாய்ந்த அவசர விஷயத்தை விவாதிக்கவும் இந்தச் சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுகிறேன்" என்ற தீர்மானத்தை நான் கொடுத்திருக்கிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினரால் குறிக்கப்பட்டுள்ள காரியம் அரசினரின் அன்றாட சாதாரண நிர்வாகத்திற்கு உட்பட்டு இருக்கிறது. இரண்டாவது, கவர்னர் உரையின் மீதான விவாதம் தொடர்ந்து நடைபெற்று வருவதால், இதுபற்றிப் பேசுவதற்கு நிறைய வாய்ப்பு இருக்கிறது. இந்த இரண்டு காரணங்களுக்காகவும் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு நான் அனுமதி மறுக்கிறேன்.

5. கவன ஈர்ப்பு

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் பேரவையின் 41-வது விதிப்படி கொடுத்துள்ள அறிவிப்பு நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படும் அதற்கு நான் அனுமதி வழங்கியுள்ளேன்.